# பத்திரிக்கை செய்தி

## செல்வநிலை சான்று கொடுக்க ரூ.50,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திரு.லவகுமார், மானூர் ஊராட்சி, திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது சொத்துகளின் அடிப்படையில் செல்வநிலை சான்று பெற வேண்டி 13.04.2023ம் தேதி பிள்ளையார்குளம் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். கடந்த 17.04.2023ம் தேதி இந்த விண்ணப்பத்தினை சரிபார்த்து அறிக்கை அனுப்ப கிராம நிர்வாக அதிகாரி திரு.அருள் மைக்கேல் சந்தியாகுவை புகார்தாரர் சந்தித்துள்ளார், அப்போது கிராம நிர்வாக அதிகாரி திரு.அருள் மைக்கேல் சந்தியாகு மனு மீது சரிபார்த்து அறிக்கை அனுப்ப தனக்கு ரூ.50,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருநெல்வேலி பிரிவு அலுவலகத்தை அணுகி மேற்படி திரு.அருள் மைக்கேல் சந்தியாகு மீது புகார்மனு கொடுத்துள்ளார். இப் புகாரின் பேரில் இன்று 19.04.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.அருள் மைக்கேல் சந்தியாகு, கிராம நிர்வாக அதிகாரி லஞ்ச பணம் ரூ.50,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்று, தலையாரி திரு.மாரியப்பன் என்பவரிடம் கொடுத்துள்ளார். மேற்படி லஞ்ச பணத்தினை திரு.மாரியப்பனிடமிருந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர். மேலும் மேற்படி தலையாரி திரு.மாரியப்பன் என்பவரின் இரு சக்கர வாகனத்தின் பெட்டியிலிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.16,000/- கைப்பற்றப்பட்டது.

# PRESS NOTE

## VILLAGE ADMINISTRATIVE OFFICER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.50,000/- FOR ISSUING WEALTH CERTIFICATE

The complainant Tr.Lavakumar, is residing at Manur Panchayat, Tirunelveli District. On 13/04/2023 the complainant had applied for obtaining wealth certificate at Pillaiyar Kulam Village Administrative Office, Tirunelveli District. On 17/04//2023 the complainant approached Tr.Arul Michal Santhiyagu, Village Administrative Officer, Pillaiyarkulam Village Administrative office, Tirunelveli District, who then demanded Rs.50,000/- for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tirunelveli detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 19.04.2023, during the trap proceedings, Tr.Arul Michal Santhiyagu, Village Administrative Officer, reiterated his earlier demand and received the bribe amount of Rs.50,000/- from the complainant and handed over the bribe money of Rs.50,000/- to Tr.Mariappan, Thalaiyari. Tr.Mariappan, received the bribe money from Tr.Arul Michal Santhiyagu, Village Administrative Officer. The officials of the Vigilance and Anti – Corruption, Tirunelveli Detachment arrested both the accused. An unaccounted money of Rs.16,000/- seized from the bike of Tr.Mariaoppan.